Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - ௬௬] யாழ்ப்பாணம்:- ஜய ஞூ ஆடி மீ ௨௮ உ வெள்ளிக்கிழமை (13 AUGU 1954) [இல - ௧௮]

# திருமுருகாற்றுப்படை — இலக்கிய நயம்

## வழிப்படுத்திய வகை அமைப்பின் மாண்பு

(முற்றொடர் — 2)

**திரு. சி. முருகவேள்** எழுதியது

சென்ற கட்டுரையில் ஆற்றுப்படையின இலக்கணத்தையும் திருமுருகாற்றுப்படை அவ்விலக்கணத்துக்கு அமையுமாற்றையும் இன்னும் திருமுருகாற்றுப்படைபற்றிய சிலபொதுவான கருத்துக்களையும் கூறினேன், இக்கட்டுரையில் திருமுருகாற்றுப்படையின் அமைப்பை விளக்க முயல்வேன். மரபிலே பாட்டு ஆறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு விளங்குகின்றது. கூர்ந்து நோக்கினால் பாட்டு இயல்பாகவே ஆறுக்கு மேற்பட்ட பகுதிகளாகப் பிரிவதைக் காணலாம். [illegible]ரணமாக, மரபிலே திருப்பரங்குன்றம் என வழங்கும் பகுதி கருத்தமைவில் முருகன் அறிமுகம், எதிர்த்தவனை ஆற்றுப்படுத்த முற்படுதல், திருப்பரங்குன்றம் என மூன்று இயல்பான கூறுகளாகப் பிரிகின்றது.

பாட்டிலே இவ்வாறு வருகின்ற பல்வேறு பகுதிகளும் எவ்வாறு இசைந்து நிற்கின்றன என்பதைக் காட்டினால் பாட்டின் அமைப்பை விளக்கியதாகும்.

பாட்டிலே முதல் அறுபத்தொரு அடிகளையும் கொண்ட பகுதி ஆற்றுப்படுத்தப்படுகிறவனுக்கு முருகனை அறிமுகப்படுத்துகின்றது. முருகனுடைய சிறப்புக்கள் யாவும் கேட்பவனுடைய உள்ளம் கொள்ளுமாறு இப் பகுதியில் கூறப்படுகின்றன. கேட்பவனுடைய உள்ளத்தை இழுத்து முருகனிடம் நிலைபெறுத்துவதே இப் பகுதியின் நோக்கமெனலாம். முழுப் பாட்டுக்கும் இதன் இன்றியமையாமை இந்த அளவிலே தான் அமைந்து கிடக்கின்றது. இப்பகுதியை முருகன் அறிமுகம் அல்லது பாட்டின் தோற்றுவாய் எனக் கூறலாம்.

அடுத்து வருகின்ற ("வினையே" என்பதுவரைக்குமுள்ள) ஐந்து அடிகளைக் கொண்ட பகுதியிற்றான் ஆற்றுப்படை உண்மையில் ஆரம்பமாகின்றது. பாட்டின் வித்தை இப் பகுதியிற்றான் காணப்படுகின்றது. புலவன் எதிர்ப்பட்டவனை விளித்து

"... ... ... ... ... ... ... ...
செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ்
செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப்
புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை
யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத்
தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ
முன்னிய வினையே"

என்று முருகாற்றுப்படுத்த முற்படுகின்றான். இது பாட்டின் நடுமையான ஒரு பகுதியாகும். பாட்டின் ஒருமைப்பாடு முழுவதும் இதிலேதான் தங்கியிருக்கிறது இப்பகுதியை எடுத்துவிட்டால் பாட்டே குலைந்துவிடும்.

அடுத்துவரும் பகுதிகளில் ஐந்துபடைவீடுகளில் முருகன் வீற்றிருந்தருளுமாறு கூறப்படுகின்றது. பாட்டின் தொடர்பு இறுதியிலுள்ள எதிர் தழீஇய அச்ச உவமைகளினூற்றான் புலப்படுகின்றது. இப் பகுதிகளை எடுத்துவிட்டால் கூட பாட்டின் ஒருமைப்பாடு அவ்வளவு பிழைபோகாது. ஆனால் இப்பகுதிகள் இருப்பதனால் பாட்டின் ஒருமைப்பாடு பிழைபடவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

பழமுதிர்சோலை என்ற பகுதியில் முதல்வரும் சில அடிகளில் முருகன் இருந்து அருள் புரியும் வேறு சில இடங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்விடத்தில் விழவின் கண்ணும் நிலையின் கண்ணுங்கந்துடை நிலையின் கண்ணும் முருகன் இருந்து அருள் புரிவான் என்று புலவர் கூறுகின்றார், நக்கீரர் ஐந்து படைவீடுகளிற்றான் முருகன் உறைகின்றான் என்று கருதவில்லை. முருகனுக்குரிய தலங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவிக் கிடந்தன என்பதை அவர் அறிந்திருந்தனர்.

இன்னும் தான்குறித்த எல்லாத் தலங்களுக்கும் யாத்திரை செய்துதான் முருகன் அருளைப் பெறலாம் என்றும் அவர் கருதவில்லை. ஒரு தலத்திலே அவனைக் கைதொழுது பரவிக் காலுற வணங்கினால் பெறலரும் பரிசிலைப் பெறலாம் என்பதே அவர் கருத்தாகும் அதனாற்றான "யாண்டாண்டாயினுமாக" என்று பாடினர்.

அடுத்து வரும் பகுதியிற்றான் பாட்டு முதிர்ச்சியடைந்து முடிவடைகின்றது. இப் பகுதியில் "இன்னே பெறுதிநீ முன்னிய வினையே" என்ற இடத்தில் இடப்பட்ட வித்தை மலர்ந்து கனியாகின்றது "யாண்டாண்டாயினுமாக; முந்துநீ கண்டுழி முகனமர்ந்தேத்தித் புலமையோயெனக் குறித்தது மொழியா அளவையிற் கூளியர் சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தெனத் தான் வந்தெய்திப் பெறலரும் பரிசில் நல்குமதி பழமுதிர் சோலை மலைகிழவோனே" என்று பாட்டு முடிவடைகிறது. பழமுதிர்சோலை என்ற படைவீடு மற்றைய படைவீடுகளைப்போல தனியே வைத்துப் பாடப்பெறாது முடிக்கும் வினையாகிய நல்குமதி என்பதனோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளமை கருதத்தக்கது.

* * * [வளரும்]

திருப்போரூர்ச் சந்நிதி

## முறைத்திரட்டு

சும்மா இருவெனச் சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்தில மென்(று) அன்றுரைத்த—எம்மான்
அருணகிரி நாதன் அநுபவ நாயேற்குக்
கருணை மொழி போரூரா காட்டு. (1)

தஞ்சமென வந்தன் சரணடைந்த நாயினேன்
வஞ்சமன நோவால் வாடினேன்—வஞ்சமனம்
நீக்கித் திருப்போரூர் நின்மலா! நின்னடியை
ஆக்கி யெனை யாளுவாய். (2)

நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை — நீயே
பொறுத்தால்வ துன்கடனும் போரூரா! என்னை
ஒறுத்தால் எனக்கார் உறவு? (3)

மெய்ப்பொருளாம் நின்னை விரும்பியின்ப மேவாது
பொய்ப்பொருளை நாடியிடர்ப் போக்தேனைச் — செப்பரிய
மட்டழகார் சோலை மலிந்த திருப் போரூரில்
கட்டழகா காத்தான் கடன். (4)

கண்ணிற் கருமணியே! கற்பகமே! கற்றோர்கள்
உண்ணிற்கும் ஓரொளியே! ஓர்பொருளே!—எண்ணிற்கும்
போரூர் இறையே! புனிதநிறை ஆனந்தச்
சீரூரில் நாயேனைச் சேர். (5)

அரசியல் அரங்கு

# போத்துக்கேயருக்கு மண்ணாசை போகவில்லையா?

## போர்க்கோலங் கொண்ட கோவாவின் போக்கென்ன?

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாய்க்கப்பலிற் பாராளக்கும் வினையாட்டில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற போர்வையில் ஆசிய தேசங்களுட் புகுந்து வணிகஞ் செய்த போர்த்துக்கேயர் பொருள் வணிகத்தோடு மத வணிகமும் செய்து பரத நாட்டிலும் ஈழத்திலும் புறமதம் புகுத்தியதை இன்னுந்தான் சைவ சமயத்தவர்கள் நினைத்து நினைத்து நினைத்துக் கவலைப்படுகிறார்கள். விடுதலை பயக்கத்தன் பயனாக, ஏகாதிபத்தியத் தன்மை பூண்ட இங்கிலாந்து தேசமே இந்தியாவினின்றும் வெளியேறி விட்டதென்றால், இதர ஐரோப்பிய நாடுகள் இன்னமும் ஏன் தயங்கிக் கொண்டிருக்கிறார்களோ என்பது விளக்கமாயில்லை.

பிராஞ்சியரும், புதுவையிலும் காரைக்காலிலும் இருந்து வெளியேறத் திட்டம் போட்டுவிட்டனர். ஆனால் போத்துக்கேயர் அழுங்குபோலப் பிடிவாதமாய் நிற்பதுமன்றி அடிதடி நியாயமும் பேசுகின்றார்கள்! ஆர்ப்பாட்டஞ் செய்கின்றார்கள். பணப் பெருமையினால் உலகத் தலைமைபெற முயற்சிக்கும் அமெரிக்காவின் உதவியை நாடியிருக்கின்றனர். அதற்கிடையில் இங்கிலாந்துநாட்டு அமைச்சவை இரு பகுதியாருக்கும் தாளம் போடும் வகையில் இந்தியாவுக்குப் புத்திமதி புகட்டுவதைப் பார்த்தால் நாங்கள் வெளியேறிவிட்டோம் ஆனால் ஐரோப்பியர் முற்றிலும் வெளியேறுவது கூடாது என்ற வகையில் மேனாட்டார் நடந்து கொள்வதுதான் இப்போதைய அரசியல் அவசியத்தின் போக்கு என்று ஆங்கிலேயரின் உள்ளத்திற் படுகின்றதாகத் தெரிகின்றது.

ஈழநாட்டில் சைவக்கோயில்களை அழித்துச் சைவர்களைப் புறமதம் புகுத்திய போத்துக்கேயர்கள் இந்த நூற்றாண்டிலும் இந்தியா போன்ற சுதந்திரச் சால்புநிறைந்த நாட்டில் இன்னமும் காயபோலத்தானும் இருந்துவர எண்ணுவதை வல்லரசுகள் ஆதரிப்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது! கோவாவிலுள்ள இந்தியர்கள் எக் காரணத்தால் அடிமை வாழ்வு வாழவேண்டும்? மூன்றும் உலக யுத்தம் மூண்டால் கோவாவில் வல்லரசுகள் போர்த்தளம் போட இது ஒரு வழியா?

## கிளிநொச்சிப்பகுதியில் வல்நெஞ்சமுறை

வட்டக்கச்சியில் உணவு உற்பத்திக்கூட்டமொன்று நடந்தபின் கட்டாமல் உலாவும் மாடுகளால் பயிருக்கு உண்டாகும் சேதத்தைப் பற்றிப்பேசிக்கொண்டிருந்த சனத்துப்பேரைக் கதவுகளைப் பூட்டி வைத்துக்கொண்டு பத்துப்பேர் மிகப்பிழையாக அடித்தார்களாம் அதனால் இருவர் இறக்க மூவர் வைத்திய நிலையத்துக்குக் கொண்டு போகப்பட்டனர் என்று செய்தியொன்று கூறுகின்றது.

—

## தமிழ்மொழி புறக்கணிக்கப் பட்டது

களுத்துறை நகரசபைக் கூட்ட நிகழ்ச்சிகள் சிங்களத்தில் மாத்திரம் நடைபெறவேண்டுமென்று பெரும்பான்மையோர் வாக்கு என்ற முறையில் தீர்மானிக்கப்பட்டது பற்றிக் களுத்துறை முஸ்லிம்களின் கண்டனக் கூட்டமொன்று நடைபெற்றது. வழக்கறிஞர் ஜனாப் ஏ. ஐ. எம். கலீல் தலைமை வகித்தார். குறித்த தீர்மானம் பலவாறு கண்டிக்கப்பட்டபின் இச்சபையிலே தமிழுக்கு சமஉரிமை கொடுபடவேண்டுமென்று ஒரு பிரேரணை அங்கீகரிக்கப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய ஸ்ரீ ஆடி மீ உகூ உ வெள்ளிக்கிழமை

## பண்டாரவளை அங்கத்தவரின் தானறியாச் சிங்களம்

முச்சிங்கள முன்னணியின் பின்னணிப் பேச்சுப போலப் பாராளு மன்றக் கூட்டத்தில் பண்டாரவளை அங்கத்தவர் ஆவேசங் கொண்டு சொல்லிப் போந்த தானறியாச் சிங்களத்தைக் கழிகாலிற் புகுத்தி விடுவதே தகுந்ததாகுமெனினும் இதுபோன்ற மதிகெட்ட காணமற்ற நச்சுப் பிரசாரத்தால் நாட்டின் நல்வளர்ச்சி குன்றுவதுமல்லாமல் நலலெண்ணங் கெட்டு மக்களுக்கிடையே பரப்பு உண்டாகிவிடும் என்பதையும் அவ்வாறெழும் அமைதியின்மையால அளவிறந்த தீமை ஏற்படும் என்பதையும் அமைச்சர் குழுவும் அரசியல் ஆதிக்கக்கட்சியினரும் அறிந்துணர வேண்டுமென்றே எங்கள் எண்ணத்தை இங்கு வெளியிடுகின்றோம.

ஈழநாட்டின் வரலாற்றையோ அரசியல் ஞானத்தின் அரிவரியையோ அறியாதவர்கள் கூடத் திரு சுகததாச பேசிய வகையில் ஒரு பொறுப்பு வாய்ந்த மன்றத்தில் எழுந்து நின்று இயம்பியிருக்கமாட்டார்கள். பண்டாரவளை அங்கத்தவர் 'அரங்கின்றி வட்டாடிய' அறியாமையை நினைந்து நினைந்து அநுதாபப்படுகின்றோமே யன்றி ஆவேசங் கொள்கின்றிலேம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பண்டுதொட்டுப் பல்லாயிரமாண்டுகளாக இரண்டற்ற ஒருமைப்பாடும் ஒற்றுமையும் மொழிக்கலப்பும் மத ஐக்கியமும் சால்புத் தழுவலும் இருந்து வருவதைச் சிங்களப் பேராசிரியர்களிடத்தாவது திரு சுகததாசா அறிந்து ஆறுவாராக.

அஃதொருபுறமாக இந்த அங்கத்தவர்கள் சிங்களவர்கள் தமிழர்கள் இஸ்லாமியர்கள் ஒல்லாந்தர்கள் உள்ள பாராளுமன்றத்தில தமிழர்களை ஏனனஞ் செய்யும் முகத்தால் அவர்களறியாச் சிங்கள மொழியிற் பேச்சு நிகழ்த்திய பெருந்தன்மைதா னென்னையோ? இழந்துப் பழம்பண்பாடு உடைய அரசியல்வாதி எவராவது பழிசுமத்தும் மொழிகளைப் பலரறியச் சொலலாதுமறைமுகமாகச் சிலரறியும் மொழியிற்பேசமாட்டாரென்பதைப் பண்டாரவளை அங்கத்தவர் இனிமேலாவது அறிவாராக. மரபு ஒழுக்கம் ஒரு சிறிதும் வழுவாது அங்கத்தவர்கள் ஒழுக வேண்டிய நிலையம் பாராளுமன்றமாகும். ஆங்கு எழுந்துநின்று அங்காடியில் ஆரவாரஞ் செய்வார் போன்று ஒரு அங்கத்தவர் சொற்பெருக்கியது முற்றிலும் அம்மன்றத்துக்கு நிந்தையானதென்பதை அவை நடத்தும் அறிஞரோ அமைச்சவை முதல்வரோ இன்னமும் உணராதிருப்பது பண்டாரவளை அங்கத்தவர் செய்த தவறிலும் தீங்கானதாகும். தாய் மொழியிற் பேசியதின் பெருப்பை ஆங்கிலத்தில் ஏனைய அங்கத்தவர்கள் அறிய உதவாது ஒரு சாதியினரை ஏசியின்பந் துய்த்த பாராளுமன்றத்தவரைத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரும்படி வற்புறுத்தாது விட்ட சிங்கள அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் (அவர்கள் ஆட்சிக் கட்சியினராலென்ன எதிர்ப்புக்கட்சியினராலென்ன) உண்மையில் திரு சுகததாசாவின் உணர்ச்சியுடைய உள்ளம படைத்தவர்களாயிருக்கின்றார்கள் என்றே நாம் நினைக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கைத் தமிழர்களை நாங்கள் ஒருபோதும்வெளியேறக் கேட்கமாட்டோம் என்று முதலமைச்சர் பேசுவதன் பொருட் பென்னையோ? இலங்கைவாழ் மக்கள் ஒருவரை ஒருவர் நாடு கடத்தும் வேலையில் ஈடுபடுவதானல் இத் தீவில எஞ்சியிருப்பார் யாரோ? இந்நாடு தமிழர் சிங்களவர் இஸ்லாமியர் யாவருக்கும் உரியதென்ற உண்மையை முச்சிங்கள முன்னணியாவது முதலமைச்சர் சேர் கொத்தலாவலையாவது முகமூடி போட்டு வசைமாரி பொழிந்த திரு. சுகததாச ஆவது மறுக்கமுடியாது. மறுத்தாலும் அதை மற்றையோர் ஏற்றுக் கொள்ளும்படி செய்யவியலாது என்பதை வகுப்புவாத மயக்கத்தில் சொல்வதென்ன செய்வதென்ன என்றறியாது ஆரவாரஞ் செய்யும் சிங்களத் தலைவர்கள் உணர்வார்களாக.

# சைவம் வளரச் செய்தல் எம்கடன்

திருவடிநிலையிலே விசேட தீர்த்தம் நடந்த பின்னர் பிற்பகல் 4 மணி தொடக்கம் சுழிபுரம் தேவகோட்டத்தில் வைரவமூர்த்தி சந்நிதானத்தில் சைவசித்தாந்த சங்கத் தலைவர் திரு. ஈ. சேனாதிராசா அவர்களின் தலைமையில சைவப்பிரசங்கம் நடைபெற்றது. தலைவர் தலைமைப் பேருரை வருமாறு:—

“தற்காலம் சைவசமயம் வரவரக் குன்றிவருகின்றது. சைவர்களும் மேலைத் தேச நாகரிகங்களில் ஈடுபட்டு தாம் செய்யவேண்டிய கடமைகள் சைவத் தொண்டுகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள். ‘தேகமே நிச்சயம் போகமே மோட்சம்’’ என்று முடிவுகட்டுகிறார்கள். சைவத்திலிருந்து புறமதம் மாற்றப்படுகிறார்கள். இந்தியாவில் 10 இலட்சம் மக்கள் 10 வருடங்களில கிறீஸ்துமதம் தழுவி விட்டார்கள். இப்படி இந்தியாவிலும் இலங்கையிலும் சைவர்கள் புறமதம் புகுந்தால் காலகதியில் இந்தியாவின் சைவத்தின் நிலையென்ன? இதற்கெல்லாம் முக்கிய காரணம் சைவர்கள் இந்துக்கள் தங்கள் மதத்தைப்பற்றி அறியாதிருந்ததும், சூழ்ச்சி செய்வதும் அன்னிய ஆட்சிகள் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்டதும் ஆகும். இனிமேலாவது நாம் கண்களைத் திறந்து சைவத்தைவளர்க்க வேண்டும். இல்லையேல் சிவத்துரோகிகளாவோமென்று பேசி முடித்தனர்.

மாதகல் பண்டிதர் இராமலிங்கம் அவர்கள் சைவசமயம் என்னும் விஷயம் பற்றிப் பேசும்பொழுது சைவசமயமே சமயம், சைவத்தின்மேற சமயம் வேறில்லை, அதிற்சார்சிவமாம் தெய்வத்தின்மேற் தெய்வமில்லையென்று தொடங்கி, உலகம் முழுதும் ஒருகாலம் சைவமயமாய் இருந்தது என்றும், புதைபொருளாராய்ச்சியாளரால் கண்ட, அழிந்த சைவக் கோயில்களும் விக்கிரகங்களுமே போதிய சாட்சி என்றும், கலிபோணியாவில கண்டெடுக்கப்பட்ட விக்கிரகமும், அழிந்த சைவக் கோயிலும் சுமார் ஒரு லட்சம ஆண்டுகள் வரையுள்ளன என்று பத்திரிகையில் தாம் பார்த்ததென்றும் சொன்னார். இப்படியே அநேக மேலைத் தேசங்களில், சைவக் கோயில்களும் சிவவழிபாடும் இருந்ததென்றும், இந்தியாவிலுள்ள காட்சி அளிக்கும் சைவக் கோயில்கள் அரசர்களாலேயே கட்டப்பட்டுச் சன்மானிக்கப் பெற்றன என்றும், இப்போது அப்படியான கோயில்களை முன்னடத்த மானியமாய் நடத்தாது வியாபார ஸ்தலங்கள் போல நடாத்த ஏற்பட்டதென்றும் சைவத்தின் மகத்துவம் இப்போது இல்லாது ஒழிகிறதெனவும் மிகவும் வருந்தி, தலைவர் சொன்னபடி இனியாவது சைவமக்கள் கண் விழித்துத் தொண்டு செய்யவேண்டுமெனவும் கூறினர்.

உபையாசிரியர் திரு. கார்த்திகேசு அவர்கள் முருகனும் திருப்புகழும் என்னும் விடயத்தில பேசினார். அவர் சொன்னதாவது: முருகன் தமிழ்த்தெய்வம், அவருக்கு அருணகிரிநாதர் தமிழில் ஆராய்ச்சியாளர்களின் முடிவுப்படி பதினாறாயிரம் திருப்புகழ் பாடியிருக்கிறார். அந்தப் பதினாறாயிரத்தில் சிறிது 1200 வரையிற்றான் எமக்கு அகப்பட்டது. திருப்புகழிலுள்ள சந்தச் சுவை மற்றப் பாக்களில் இல்லை என்று சொல்லி எத்தனையோ பக்திரசமான திருப்புகழ்களைப் பாடினார்.

வட்டுமேற்கு திரு. உருத்திரம் அவர்கள் பதிலட்சணம் என்னும் விஷயம்பற்றிப் பேசும்போது பதி, பசு, பாசம் என்னும் சைவசித்தாந்தத்தில் சபையோர் விளங்கப் பேசினார். பதி என்று உள்ளதோ அன்று பசுவுண்டு. பசு என்று உளதோ அன்று பாசம் உளது எனவும் ஆன்மா ஈடேற்றமடையவேண்டுமானால் சிவதொண்டும் செய்யவேண்டும். தேவாரம் திருவாசகம் பாடவேண்டும். விரதம் அனுட்டிக்கவேண்டும். ஈசன் பஞ்சகிருத்திய நடனஞ் செய்வது ஆன்மாக்களை உய்யச் செய்யவே எனவும் பேசி முடித்த பின்னர் தேவாரபாராயணத்துடன் 7 மணியளவில் கூட்டம் இனிது நிறைவேறி, அம்மை அப்பனின் பூசை நடைபெற்றுப் பிரசாதம் வழங்கப்பட்டது.

## சைவப் பிரசங்கம்

சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் காரைநகர்ச் சைவ மகா சபையின் ஆதரவில் நடைபெற்ற வாராந்தப் பிரசங்கத்தின்போது, சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் வேதாகமங்கள் என்னும் விடயத்தைப் பீடிகையாகக் கொண்டு, வேதாகமங்கள் சைவசமய ஆப்தவாக்கியங்களென்றும், உண்மையான சைவசமயிகள் யாவரும் வேதாகமங்களின் பிரகாரம் தமது வாழ்க்கையை நடத்தவேண்டுமென்றும், கோயிலதிகாரிகளும் வேதாகமங்களின் பிரகாரமே ஆலயங்களை நடத்திவரவேண்டுமென்றும், அல்லாதகாலத்து அக்கிரமத்தில் அனர்த்தங்கள் நேரிடுமென்றும் வற்புறுத்தி வைத்தார்கள்.

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

## சங்கார காலமா.........?

தென்னிலங்கையிலே 'பயக்கால' என்ற கிராமத்திலே கத்தோலிக்க கோயிற் கட்டடத்தைத் திக்கிரையாக்கிய பயங்கரச் சம்பவம் இக்காலப் போக்கை எடுத்து விளக்குகின்றது. வேற்றுமைக்கு மாற்றுமருந்து சூரத்தனம் என்பதைப் புரட்சிக் கட்சியினர் காட்டிவர அதைப் பயன்படுத்த இந்நாட்டு மக்கள் இசைந்து நிற்கின்றார்கள் என்றால் ஈழத்தின் எதிர்காலம் எவ்வாறாகப் போகின்றதோ........? உலகமென்பது பலவிதச் சம்பிரதாயமென்பர் அறிஞர். பல மதங்கள், பல மொழிகள் பல இனங்கள்உலகில் உள்ளன. ஒன்றுக்கொன்று போர்க்கறை கூவிப்புரட்சி செய்ய வேண்டியதில்லை இதுவே நன்மக்களின் நல்வழி. அப்படி இருக்கக் கூடாதாம். அழித்தல் வேலையில் ஈடுபடலே மனித உரிமையாம்! மனித குல மரபெங்கே........? மாண்பெங்கே .... ....!

உ
இன்று (13-8-54)
நல்லைக் கந்தன்
பத்தாம் நாட்காட்சி
*

## புரட்சிக்காரரைப் போற்றவேண்டுமாம்!

இடதுசாரிக் கட்சியினர் சில நகரசபைகளின் ஆதிக்கத்தைக் கைப்பற்றியதும் செய்த ஆக்க வேலைகளை மக்கள் கவனிக்க வேண்டியதவசியமாகின்றது. தமிழ் சிங்கள மொழிகளில் முனையைதை அகற்றும் அழிந்தல் வேலை. சென்ற ஆவணியில் வேலைநிறுத்தஞ் செய்து புரட்சியை உண்டுபண்ணிப் பல உயிர்ப்பலிக்குக் காரணராகிய அழிந்தற் பணியாளரைப் போற்றி மனிதவுள்ளத்தின் புனிதத்தைப் போக்கி அசுர குணத்தை ஆக்க முயற்சிக்கும் செயல்!

●

## ஆனல். .....வாக்காளர்கள் அழுதபடியே .... .... .......

இடதுசாரி அங்கத்தவர்களைத் தெரிவு செய்த வாக்காளர்கள் ஊர்வலமாகச் சென்று நகரசபை முன்றிலில் நின்று 'தேர்தற் பிரசாரத்திலே தேனொழுகப் பேசினீர்களே, இலவசப் புத்தகம் தருவோம், இடைவேளை உணவு தருவோம் எல்லாம் தருவோம் என்று. அவை எங்கே' என்று கூக்குரல் இட்டார்களாம். அத்தனை பேரும் இடதுசாரி வாலிப முன்னணி அங்கத்தவர்களாம். எத்தனை நாளுக்கு இந்தவித ஏமாற்றம்!

# பண்டைத் தமிழ் மக்களின் பரந்த நோக்கமும் பெருஞ் சிறப்புக்களும இன்று எங்கே?

—————0—0—————

## அன்றுபோல் இவைபெறத் தொண்டாற்ற வேண்டும்

————●————

### ஈழவளநாட்டின் அருந்தவப் புதல்வர்களே முன்வாருங்கள்!

தமிழர்களாகப் பிறந்த எம் அனைவருக்கும் குலம் ஒன்றே — நமக்குள் உயர்வு தாழ்வு வேறுபாடில்லை — நமக்குக் கடவுளும் ஒன்றே! என்னும் உயர்ந்த உயர்ந்த முறையில் வாழ்க்கை நடத்தியவர்கள் நம் முன்னோர்கள்; அதுமட்டுமல்ல இவ்வுலகின்கண் உள்ள ஊர்கள் யாவும் நாம் பிறந்த ஊர்களே; உலக மக்கள் யாவரும் நம் உறவினரே என்ற பரந்த பொதுமையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

இவ்வளவு சிறந்த வாழ்க்கை முறையையும், பரந்த நோக்கத்தையும், ஒற்றுமைப் பண்பையும் கைக்கொண்டு வாழ்ந்த தமிழ் முது குடி மக்களின் மரபினரேயாம் எனின் அறிவும் ஆற்றலும் மிக்க அப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைச் சீர் திருத்தத்தில் ஒரு சிறிதளவாவது நம்மிடம் இன்றுளதா? ஏன் இல்லை? என்பதைநாம் என்றைக்காவது ஒரு பொழுதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? பழந் தமிழ் நாட்டின் மன்னர்கள் ஒரே குலத்தினராக வாழ்ந்தார்கள், பழந் தமிழ் மக்கள் ஒரே இனத்தினராக வாழ்ந்தார்கள். பழந் தமிழ் நாட்டின் மொழியும் ஒன்றாகவே வாழ்ந்து இடம் பெற்று வந்தது. தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட அனைவரும் ஒருவருக்கொருவர் உறவினரே. பெண் கொடுத்தல், கொள்ளல் தமிழர்கட்குப் பொதுவாக நடைமுறையில் இருந்து வந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டில் வதியும் வளம் பெற்ற தமிழனின் நிலை என்ன? எத்தனையோ பல்லாயிரங் குலங்கள்! குலத்துக்குட் குலங்களாக் கோத்திரங்களாக எவ்வளவு பிரிவுகள். ஒரே குலத்தினைச் சேர்ந்தவர்களிடையிற் கூடப் பெண் கொடுத்தல், கொள்ளல் தடுக்கப்பட்டுத் தமிழ்மக்கள் எத்தனை எத்தனை சில்லறைக் கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டனர். நாட்டுத் தலைவர்களாக, எந்நாட்டவருக்கும் அடிமைப்படாத வீரமறவர்களாக காடழித்து நாடாக்கியவர்களாக நீர்வளம் நிலவளம் குடிவளம் கருதிப் பணியாற்றியவர்களாக கடல் வாணிபம் நடத்தியவர்களாக உரோமபுரி, எகிப்தியம், யவனம், சீவகம், கடாரம் போன்ற கடல் கடந்த தொலை நாடுகளுடன் தொடர்புடையவர்களாக வாழ்ந்து வந்தனரே எம் தமிழ் மக்கள். அவ் வீரம் செறிந்த தமிழ்ப் பெரு மக்களின் மரபினராகிய நாம் இன்று எடுப்பார் கைப் பிள்ளைகளாக, தடியெடுத்தவனையெல்லாம் தண்டக்காரனாக மதித்து அடிமைப்படும் குறை மதியினராக, அஞ்சியஞ்சிச் சாகும் கோழைகளாக, வறுமையில் வாடி உழன்று, அதையே நம் விதியென நம்பி வாழ்பவர்களாக, கடல கடந்து சென்று வயிறு வளர்க்கும் கூலிகளானதேன்? சிறிது நேரமாகிலும் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

எத்தொழில் புரிபவரேயாயினும், யாவரேயாயினும, ஆண்களேயாயினும் பெண்களாயினும் கற்ப

**********************

எழுதியவர்

**திரு. வே, சிற்றங்கநாதன்**

**********************

தைக் கடமையாகக்கொண்டு வாழ்ந்தவர்கள் மறத்தமிழர்கள. கூலவாணிகம, மருத்துவம், மட்பாண்டம் வனைதல்போன்ற பிற தொழில்களில் ஈடுபட்டிருந்தோரும் பழந்தமிழ் நாட்டில் கசடறகற்ற நிபுணர்களாயும் பேரறிஞர்களாயும் இருந்தனர் நம தமிழ் நாட்டில் நீதி தவறாது செங்கோலோச்சிய முடியுடை வேந்தரும மற்றும சிற்றரசர்களும கல்வி தேர்ச்சியுற்றிருந்தனர்.

> "கற்க கசடறக் கற்பவை
> கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்று செந்நாப்போதார் கூறிய திருமொழியைக் கடைப்பிடித்து வந்தார்கள் நம் மாட்சிமை தங்கிய மன்னர்கள். அக் காலத்தில் இருந்த கவிஞர்களும் அரசரோடு நகையுரையாடி நட்புக்கொண்டிருந்தார்கள். இதுவுமல்லாமல் வேந்தருக்கு உற்சாக மூட்டும உணர்ச்சி ததும்பிய பாக்களைப் பாடி வீரத்தை ஊட்டினார்கள். சேர மன்னருள் வீரம் வாய்ந்தவன் நெடுஞ்சேரலாதன். அவன் இமயமலைமட்டும் படையெடுத்துச்சென்று தன்னை எதிர்த்த ஆரிய மன்னரை அடியோடு சிறை பிடித்தான். இமயத்தில் தன் வில்லுக் கொடியை ஏற்றி "இமய வரம்பன்" என்னும பெயரைப் பெற்றான் அவன் ஈட்டிய புகழைப் பாடினர் பொய்யறியாப் பரணர் என்னும் ஒரு கவிஞர். அடலேறு போன்ற கரிகால் சோழன் படையெடுத்து மாற்றாரை வென்று ஆகாயத்தை அளாவிய மலையில் சோழதேசப் புலிக்கொடியை இறுமாப்போடு ஏற்றினான். இவனை நாட்டு மக்கள் பலவாறாகப் போற்றிப் புகழ்ந்தார்கள். அனேக மன்னாதி மன்னர்கள் விலையுயர்ந்த பொருள்களையும், பட்டையங்களையும் பரிசாகக் கொடுத்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை எம்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.     S. கனகசபை
மனேஜர் (சிறுப்பர்).


உண்மைபேசு; உயர்வு அடைவாய்

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

———:0:———

1942ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டவைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K. K. S. றோடு பெ. அரு. மு முத்துச்சாமிசெட்டியார் அன் சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்பொழுது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்

| நம்பர் | உ. மா. ஒரு | கொடுத்தருபா | ஊர் பெயர் நகைகளின்விபரம் |
|---|---|---|---|
| 10890 | 16-10 52 | 46 | நவாலி தெற்கு சின்னையா தியாகராசா விலாசம்போட்ட சிகில்மோதிரம் 1 |
| 11063 | 23-10 52 | 50 | காச்சியம்மன் கோவிலடி கந்தையா நடராசா சிலகல்லில்லாத தாலி 1 |
| 11148 | 27-10-52 | 7 | கண்டிகுளி ஞானப்பிரகாசம் இம்மானுவேல் தொங்கட்டானும் சில கல்லுமில்லாத இமி வெள்ளைக் கல் காதுக்குச்சி சோடி 1 |
| 11252 | 1-11-52 | 35 | சோனகதெரு முகையதீனப்துல்காதர் முகமது மீராசாகிப தொங்கட்டானில்லாத இமி வெள்ளைக்கல் காதுகுச்சி சோடி 1ம் முரிந்த சங்கிலியும் சிலகலுமில்லாத இமி வெள்ளைக்கல் தொஙகட்டான் சோடி 2ம் தொங்கட்டானுடன் காது வாளி 1ம் மோதிரம் 1 |
| 11501 | 14-11-52 | 25 | நாவாந்துறை பொன்னர் கந்தையா ஒன்றுக்குக் கம்பியில்லாத முருக்கு பின்னைக் காப்பு சோடி 1ம் சிறு ஆடுதன் மோதிரம் 1 |
| 11570 | 18-11-52 | 35 | இந்துகாலேஜ் ஒழுங்கை வேலுப்பிள்ளை சண்முகம் கம்பிக் காப்பு 1 |
| 11574 | ,, ,, ,, | 10 | சுச்சமட்டை முருகேசு கனகரெத்தினம் மோதிரம் 1 |
| 11745 | 27-11 52 | 30 | ஆனைக்கோட்டை கந்தையா தருமலிங்கம் பழுதமட்டப்பொன் திருகுடன் சிலகல்லிலலாத மழுக்கல் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 11951 | 9 12 52 | 20 | தாவடி வேலாயுதர் வீரசிங்கம் இமி கல் தகூராகூடு 1 |
| 12010 | 13 12 52 | 31 | ஆறுகால்மடம் முருகுப்பிள்ளை நவரெத்தினம் தாலி 1 |
| 12096 | 18-12-52 | 4 | நல்லூர் அப்பையா வல்லிபுரம் இமி வெள்ளை பச்சை கட்டிய தொங்கட்டான் மூக்குத்தி 1 |
| 12243 | 25-12 52 | 20 | மண்டதீவு கன்னித்தம்பி கணபதிப்பிள்ளை டிம்மியும் சில முத்துமில்லாத இமி கல் டிம்மி பதக்கம் 1 |
| 12250 | ,, ,, ,, | 33 | மண்டதீவு சந்தவனம் நாகேந்திரம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 12314 | 29 12-52 | 40 | சிவியாதெரு மேற்கு விஸ்வநாதர் கனகரெத்தினம் தாலி 1 |
| 12439 | 4 1-53 | 8 | நாவாந்துறை செல்லையா அந்தோனிப்பிள்ளை சிறு ஆடுதன் பொட்டு 2 |
| 12448 | 5 1-53 | 35 | இருபாலை இராமலிங்கம் நாகரெத்தினம் சிலகல்லில்லாத இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 12708 | 19-1-53 | 40 | கோப்பாய் தெற்கு நாகமுத்து சரவணமுத்து பின்னைக்காப்பு சோடி 1 |
| 12811 | 28-1-53 | 102 | நாவலர்றோட் சுப்பையா கந்தசாமி சங்கிலி 1 |
| 12894 | 28 1-53 | 120 | மாவிட்டபுரம் இராமலிங்கம் கனகரெத்தினம் சேர்மானக்கல் ஆடுதன் பொட்டு கோர்த்த சங்கிலி 1ம் ஜெவர் மோதிரம் 1 |
| 12913 | ,, ,, ,, | 65 | நல்லூர் இளையதம்பி அம்பலவாணர் கம்பி மாத்துவிட்ட சில கல்லில்லாத இமி கல் புறோச் 1 |
| 12996 | 2-2-53 | 12 | நாவாந்துறை செல்லையா அந்தோனிப்பிள்ளை முருக்கு பின்னைக்காப்பு 1 |
| 13036 | 5-2 53 | 6 | கனாயூர் முருகன் சந்தியோ சிறு சிகில் மோதிரம் 1 |
| 13249 | 18-2-53 | 35 | வண்மேற்கு மாதர் சின்னத்துரை மோதிரம் 1 |
| 13293 | 20-2 53 | 41 | நாவாந்துறைவடக்கு செபஸ்டியம் அலங்கம் மட்டப்பொன் நாட்டுக் கடுக்கன் சோடி 1ம் ஒன்றுக்கு மேல் குண்டு இல்லாத மட்டப்பொன் நாகபட்டம் சோடி 1 |
| 13299 | 21-2-53 | 15 | சீராவியடி நாகமுத்து குமாரசாமி ஒன்றுக்கு திருகில்லாத காதோலை கட்டைக்கம்பி சோடி 1 |
| 13300 | 21 2-53 | 40 | கஸ்தூரியார்றோடு சுப்பிரமணியம் செல்வராசா இமி வெள்ளைக்கல் சிமிக்கி சோடி 1ம் இமி வெள்ளை நீலம்கட்டிய மோதிரம் 1 |
| 13303 | ,, ,, ,, | 20 | ஸ்டான்லி றோடு குருசாமுத்து செபமாலை சிலகல்லில்லாத இமி வெள்ளைக்கல் தொங்கட்டான் சோடி 1 |
| 13421 | 25-2-53 | 175 | இணுவில் மேற்கு சுப்பையா சின்னத்துரை சங்கிலி 1 |

விற்பனவு: ஜய ஸ்ரீ ஆவணி மீ 12 உ (28—8—54) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படியார்கள் கடையில் ஈடுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை,
8-8-54.

[M 102 6, 13—8—54.]

சி. பசுபதிச்செட்டியார்
வெந்திஸ்மேஸ்தர்,

நேயர்கள் நேரம்

# தமிழில் வேதங்கள்

## தந்திருக்க வேண்டுமென்பதற்கு நியாயம்

எல்லையில்லாத சிவனது சம்பந்தியே சைவன்; அந்தச் சைவனே சிவன். எல்லா உலகமும் ஆனவனை — பரந்த வெளியை — பரஞ்சோதியை வணங்குகு சைவனுக்குப் பக்தியொன்றே போதும் என்று சொல்லுதலும் பொருந்தும். ஆதலால் வரம்பு வேண்டும் என்பது அவசியமில்லை. வரம்பு — ஓர் அளவு.

தமிழ் இயற்கையானது —இனிமையானது— அநாதியானது— அன்புடையது — அறிவுடையது — பிறநாட்டுச் சொற்களுடன் கூடினும் தன்னை வேறாகக் காட்டி உண்மையுரைப்பது என்பதுண்மையே.

அட்சரங்கள் உருவடைய முன்னம் குறியீடுகளாகவே இருந்தன. உதாரணமாக நகரம் "0" வட்டமே குறியீடாகவும், மகரம் "—" கீறே குறியீடாகவும், சிகரம் "3" இலக்கமே குறியீடாகவும், வகரம் "‿" பிறையே குறியீடாகவும், யகரம் "●" பிந்துவே குறியீடாகவும் உடைமையால் இவ்வட்சரங்களுக்குப் பிறப்பிடமாகும் பிரணவமும் ("ஓம்; ....") தமிழட்சரத்தின வடிவாதலும், அட்சரங்கள் உருவாகும்போது எந்த வடிவிலும் உருவாக்க வருவதாலும், ஒலிவடிவாக வுள்ளன வரிவடிவாகவும் அமைந்தன. "ஆரியமும் தென்தமிழும் ஆனை" சிவன் என்றபடி அக்காலத்தில் ஆரிய பாஷையையும், தமிழ்ப்பாஷையையும் கூறினர் என்பது வெளிப்படை. அப்படித் தமிழ ஆரியமான கடவுள் அவ்வப் பாஷையாளருக்கு அவ்வப்பாஷையில் தானே சாத்திரங்களையும் செய்தருளினர் என்பது மறுக்கொணா உண்மை.

"விசுத்தா பிரகிருதாசேத்துவிதா மனுஷாஸமிருதா!
சிவசம்ஸ்காரிணும் சுத்த
பிராகிருதா ஈதரேமதா!!

என்றும்,

"வர்ணாச்சிரமாதி தர்மா[ணாம்
விவஸ்தா ஹி துவ[விதாமதா !!
ஏகாசிவேக கிர்த்திஷ்டா
பிரஹ்மணா கதிதாபரா!!"

என்றும் கூறியபடி மனிதர் இருவிதம்; ஒன்று: விசுத்தர் -சிவசம்ஸ்காரிகள் — அதிவர்ணாச்சிரமிகள் — (வருணமில்லாத சைவர்) மற்றது பிரகிருதர்—மாயா சம்பந்தமுடையவர் (வருணாச்சிரமிகள்) இவற்றில் வருணாச்சிரம தர்மம் பிரமாவினால் சொல்லப்பட்டமையின அதையனுட்டிக்கும் ஆரியனுக்குப் பிரமாவே தகப்பனும், விஷ்ணுவே தெய்வமும் ஆயது போல, அதிவர்ணாச்சிரம தருமத்தைச் சொன்ன சிவபெருமானே தமிழனாகிய சைவனுக்குத் தந்தையுந் தெய்வமுமாவர். சைவர்களுக்குச் சிவபஞ்ச முகங்களிற்றோன்றிய வேதாகமங்களும், வருணாச்சிரமிகளுக்குப் பிரமனாற்றோற்றுவித்த வேதமும் பிரமாண நூல்களாம்.

"சதாசிவந்தத்வம் முத்தமிழ் வேதம்" எனத் திருமந்திரம் கூறுதலின் சிவபெருமானால் தமிழனுக்குத் தமிழில் தானே வேதாகமங்கள் சொல்ல வேண்டுமென்பது வாசகர்கள் கண்டறிவாராக.

"ஆரியமுந் தமிழுடனே சொலி" எனுந் திருமந்திரத்துக்கு உரையாசிரியர் மானவ வே. விசுவநாத பிள்ளையால் "வடமொழி தமிழ்மொழிகளிலுள்ள பதிஞானங்களை (வேதாகமம்) ஏககாலத்தில் (பிரமசிருட்டிக்குமுன்) சொல்லி எனக் குறிப்பட்டதையும் ஓக.

"பழமறையந்தணர்" என்ற வாதவூர் புராண அடிக்குப் பழைய வேதங்களை அனுசிய சைவர் என்னுமிடத்துப் புதுமறை ஒன்று வேண்டும்; அது பிரமனால் சொன்ன ஆதி வேதமே என்பது போதரும். ஆகவே பழமறை— அநாதிவேதம் சொன்னவர் சிவபெருமானே: அதை அணுகி ஆராய்பவரும் அநாதி சைவரே, பழமறையந்தணர்— அநாதி சைவரே.

"சிவேநோத் பத்யதே
[சைவ"

என வாதுளாகமமும்,

"அநாதி சைவ சம்புசியாத்
ததஸ்ய கணு அபி"

எனச் சந்திரஜ்ஞானகமமும்,

"அநாதி பக்த ரூபேண
பகவான் பரமேசுபர"

என யோக ஜாகமமும்,

"சைவா போற்றி"

எனத் திருவாசகமும்,

"பாசுபத வேடத்தானை"

எனத் தேவாரமும் கூறுவதால் சைவம் அநாதி. சிவ கோத்திர முடையவரே அநாதி சைவர்.

இரங்கூன் மகாநாடுபற்றி
இந்தியாவின் எண்ணம்

—0—

கொழும்பு மகாநாட்டிற் பற்றிய எல்லாம் விருமபினால் தாமும் பங்குபற்றுவதாகத் தமது எண்ணத்தைப் பண்டித நேரு அறிவித்திருக்கின்றாராம்.

—

### பாடசாலைச் சமயவளர்ச்சி

ஜய வருடம் ஆடி மாதம் 21ந் திகதி (5-8-54) வியாழக்கிழமை பகல் பொன்னாலை வரதராசப்பெருமான் வித்தியாசாலை மண்டபத்தில் சிவஸ்ரீ வை. சாமிக குருக்களால சமயதீட்சையும் உபதேசமும் நடைபெற்றன. இதில் 5ம் வகுப்புத் தொடக்கம் J. S. C. முடியவுள்ள மாணவர்களும் பல பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இப் பாடசாலையில் இதுவரை நடைபெறாத சமய தீட்சை இப் பாடசாலை ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் தொடங்கி நடத்தப்பெற்றது. ஒவ்வொருவருடமும் இது தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

———

### பண்டத்தரிப்பான்புலம்
### சிதம்பரேஸ்வரசுவாமிகோயில்
### மகாகும்பாபிடேகம்

ஆவணி 13உ ஞாயிற்றுக்கிழமை (29-8-54) பகல் 10 மணிக்கு மேற்படி கோயிலில் விகனேஸ்வரபூசை முதலியவைதொடங்கிநடைபெற்று 14உ திங்கட்கிழமை (30-8-54) காலை 7 மணிக்கு ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரேஸ்வர சுவாமிக்கும் மூர்த்திகளுக்கும் கும்பாபிடேகம் நடைபெறும்.

44 நாட்களுக்கு நடைபெறவிருக்கும் கும்பாபிடேக உபயங்களில பங்குபற்ற விருபபுவோர் வேண்டிய ஒழுங்குகளை முன்னரே செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

'அமிர்தஸ்ய புத்ர '—' "பிரதம ஜாத" ரிஷிகணாதிபதிகளே பாசவிதலையுடைய பரம சைவர். இதை இருக்குவேதம் யசுர்வேதம கூறும். அவர்கள் வீர, நந்தி, பிருங்கி, விருஷப, கந்த கணாதிபதிகள என்றும் கைலாயத்துச் சோதிஷ் கந்தத்து ஈசானிபதிக்கி விருப்பர் என்றும் மிருகேந்திரம் கூறும். சுப்பிரபோதாகம, பாசுபத தந்திரங்களிலு மவ்வாறே மேலும் அவரவர் நாமங்களால் கிளவும் வீரலிங்கிய நந்திசிகாப்ரகந்தோபநிஷத் முதலிய உபநிடதங்களே சான்றும்.

ஐ. அரியபுத்திரன்
இசிபலை, 21-6-54.

### பண்டைத் தமிழ்மக்களின்
### பரந்த நோக்கமும் பெருஞ் சிறப்புக்களும்
# இன்று எங்கே?

-3ம் பக்கத்தொடர்ச்சி

மகிழ்ந்தார்கள். அவன் சிறப்பைச் சிலப்பதிகாரங் காட்டுகின்றது.

"வடவரைமேல் வாள் வேங்கை ஏற்றினன், திகழெட்டும் குடை நிழலிற் கொண்டளித்த கொற்றவன்காண் அம்மானை — இமயமலைப் பருவதத்தில் பாண்டியன் பகைவராகிய ஆரியரை அழித்து வீராவேசத்தோடு மீன் கொடியை ஏற்றி வெற்றிமாலை சூட்டினன். இம்முடியுடை மூவேந்தருடைய வெற்றியைக் குறித்துச் சில ஆரிய மன்னர்கள் அசதியாடினர் இதைக் கேள்வியுற்ற "சேரன் செங்குட்டுவன்" சீற்றங்கொண்டான். வடநாட்டோடு இன்றே போர் புரிவேன், தமிழ அரசரைக் குறைகூறிய மாற்றாரை மடிப்பேன்; கற்பரசியாகிய கண்ணகி தேவிக்கு இமயத்தில்சிலைசமைப்பேன்; அச் சிலையைப் பகைவனின் தலையில் சுமத்தி வருவேன" என்று ஆண்மையோடு கூறினான். உடனே படையோடு பல வீரர்கள் புறப்பட்டார்கள் என்று சிலப்பதிகாரம் கூறும் செய்யுள் ஒன்று பின்வரும்.

"காவாநாவிற் கனகனும்
விசயனும்
விருந்தின் மன்னர்
தம்மொடுங்கூடி
அருந்தமிழ் ஆற்றல்
அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றங் கொண்டு
இச்சேனை செல்வது"

என்று அதன் பெருமையைக் கூறினான் சேரமன்னன். இத்தகைய வீரம் வாய்ந்த தமிழ் மன்னர்களின் சிறப்பியல் புகளை எடுத்துக் கூறிவிட முடியாததற்பொழுதிருக்கும் தமிழ்மொழியின் நிலையையும் தமிழ்த்தாயின்ற வீரப் புதல்வர்களுடைய நிலையையும் சொல்லிற் றிரட்டாமல் செயலிலே திரட்ட முன்வாருங்கள் வருங்கால இளைஞர்களே!

அநேக கல்வி நிலையக் கூட்டங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் அறிஞர்கள் ஆவேசமாகக் கூறுவது என்னவென்றால் "வருங்கால நாடு அல்லது உலகம் வாலிபர்கள் கையில் தங்கியிருக்கிறது" அவர்களுக்குப் பெரியோராகிய நாம் புத்தி புகட்டி ஏவக்கூடிய வழியில் ஏற்றவேண்டும்" என்று மெய்யுரை புனைவார்கள். ஆனால் ஒரு குறிச்சியில் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து கிராமத்தின் அறியாமையைப் போக்கவும், கிராமத்தை முன்னணிக்கு இழுத்துக் கொண்டு செல்லவும் ஏதுங் கழகங்கள், சங்கங்கள், சபைகள் அல்லது பொதுக்கூட்டங்கள் கூட்டினால் அறிவுமுதிர்ந்த அன்பர்கள் வரவு பின்னிற்கும். உரையாடுவார்கள் பெரியோர்கள் முற்பக்கம், ஆனால் அச் சங்கத்துக்குத் தீங்கை விளைவிப்பார்கள் பிற்பக்கம். இவர்களின் இளிவு[illegible]யை ஒரு சிலர் போற்[illegible]வர், இன்னும் சிலர் தூற்றுவர். இது தா[illegible] நம் முதுகுடிமக்களின் உபந்நியாசங்கள்? இதுதானா எம் மூத்தோர்களின் முத்திப் பழுத்த அறிவுக் களஞ்சியம்? அநேகர் பூமாலை சூடியவுடன் பேச்சளவிலே உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் மேடையில் நின்று உற்சாகமாகப் பேசுவார்கள். ஒரு சிறு காலம் சென்றவுடன் அதை அடியோடு மறந்து ஆடம்பர வாழ்க்கையில் அமர்ந்து விடுவார்கள். ஆகவே இழவள[illegible]ட்டின் அருந்தவப் புதல்வர்களே நம் நாட்டின் மொழியையும் பண்பாட்டையும் முன்னைய மேடைப் புலவர்களைப் போலாகாது செம்மையான செயல்களால் நாட்ட முன்வாரீர்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161
விலாசம்:
67, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# நல்லைக் கந்தனை வந்தனை செய்க

நல்லைநாதா! கந்தா! முருகா! குகா! குமரகுருபரா! ஆறுமுகவா! ஞானபண்டிதா! வேதபஞ்ச சொரூபனே! ஞானத்தானுருவாகிய நாயகா, இனிமையுமாய் வருமின்ப சீலனே, கலியுகத்தில் கண்கண்ட மெஞ்ஞானதெய்வமே, உன் திருக்கோயில் கொடியேற்றவிழா ஆரம்பமாய் விட்டதே. இத் தெய்வம் மணக்கும் திருவிழாக்களை முறை தவறாத சிறந்த வேதாகம ஒழுக்க முறைகளை, தாங்கள உலாப்போகுமுருக்கமான காட்சிகளை அடியார்களுமன்பர்களும் கண்டு தரிசிக்க என்ன புண்ணியஞ் செய்தோமென்று குதூகலப்பட்டு திரள்திரளாகப் பல்லாயிரம் திருமெய்ப்பொருட் செல்வர்களுடன் இடையூறு புகுந்து இழிவாக்காமல் சுகாதாரப் பகுதி, பாதுகாவலர் பகுதி செய்யுந் தொண்டுகள் வியக்கத்தக்கதே. தண்ணீர்ப் பந்தல் அன்னதான தர்மங்களை அமைத்து ஆங்காங்கு அருட்பணி செய்பவர்களின் கூர்த்தமெஞ்ஞானத்தை என்னுவால் இயம்ப இயலுமா? அன்பையுமருளையு மறிவையும் பெற்றுப் பிறவிப் பெரும்பயன் அடைய இதுவல்லவா தருணமென்று அண்மை சேய்மையிலுள்ளவர்கள் இயமம் நியமத்தோடு திரள்திரளாக வருவதும் வழிபடுவதும் வணங்குவதும் போவதும் பக்தியை வளர்க்குங் கண்கொள்ளாக் காட்சியே காட்சி. அங்கப்பிரதட்சணஞ் செய்யுமாண்களும், அடியழிக்கும் பெண்களும், காவடியெடுக்கும் கண்ணியமுள்ளவர்களும் அவனருளைப் பெற அருட்பாடுபடும் ஒழுக்கமுள்ளவர் விரதசீலத்தின் உயர்ந்த நிலை. சைவஉலகம் இக்கண்கொள்ளா வழிபாடுகளை கண்டு கண்டு அன்னனம் மூபன்று நல்லூர்க்கந்தனின் அருட்பிரவாகத்தைத் தேடுவாராக.

பன்னிருகையா, பார்பதிபுத்திரா, பரமதயாளா, ஆன்மாக்களுக்கறிவையாக்கியருளு மருள்வள்ளலே! வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க விபூதி சாதனம் போற்றப்பெற மூவுலகுந் தன்னில் வந்திடுமுயிர்கள் செய்த வல்வினையைப் பொறுத்தருளி ஞானசம்பந்தன் போன்ற பெரியோர்களைத் தோற்றுவித்து தூய்மை செய்து அறியாமையை அகற்றி அனுக்கிரகஞ் செய்வீராக.

## எழுதியவர்

## திரு. பொ. அப்புக்குட்டி.

பேர் குவித்து வழிபாடு செய்யும் கோலத்தைக் குறிக்க முடியவில்லையே. குழ்மிடுமடியார்களின் அன்பு ஆசாரங்களின் சிலங்களைச் சித்திரிக்க முடியவில்லையே. "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று சுருதிகள் முழங்கும் சொற்பொருளை ஒரு சிறிது விளக்கும் கண[illegible]லாத கற்பூரம் முதலாம் [illegible]ங்களின் அலங்காரங்களை அ[illegible] முடியவுமில்லையே! நினைதத[illegible]ளிக்கும் மனத்தையுமுருக்கு திருமுறைப் பாராயணச் சிவனடியார் திருக்கூட்டச் செலவாக்கையென்னென்பேன். சிவப்பிராமணர்கள் விபூதி உருத்திராக்கப் பிரகாசிகக உபவீதக் காட்சியோங்க பாவத்தைக் கடிந்து பரமபதத்தையுபகரிக்கும் வேத அத்தியயனஞ் செய்து வலம்வரும் காட்சியல்லவா கருத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சி. தெய்வ சிந்தனையைக் காட்டுவிக்கும் மேளவாத்தியங்களின்கோஷம் வானைப் பிளக்கிறதை வாயாற் சொல்ல[illegible] தெங்ஙனம். திபாரனஞ் செய்ய வழிகோலும் விதம்விதமான வாகனங்களில் தங்கள் காட்சியளிப்பதை வர்ணிக்க முடியாதே. இத்

## அரிசிப்பங்கீடு அற்றுப்போகுமா?

இப்பொழுதிருக்கும் நிலைமை நீடித்து பர்மாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் குறைந்த விலையில் அரிசி பெற முடியுமானால் அரசாங்கம் பங்கீட்டு அரிசி விலையைக் குறைக்கவோ அல்லது அடுத்தவருடம் அரிசிப் பங்கீட்டை நீக்கவோ முடியுமென்று உணவு மந்திரி கூறுகிறார்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

**இணுவிலில்**

இணுவில் சைவமகாசன வித்தியாசாலையில் சென்ற வெள்ளிக்கிழமை பகல் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசைதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய திருத்தொண்டத் தொகையும் திருக்கேதீசுவரப் பதிகமும் பாடசாலை மாணவர்களால் பண்ணோடு பாடப்பட்டன. சுந்தரமூர்த்தி நாயனர் வாழ்க்கை வரலாறு என்னும் பொருள்பற்றிப் பண்டிதர் திரு க. அருளம்பலம் அவர்களும் சுந்தரமூர்த்தி நாயனரும் சைவமும் என்னும் பொருள்பற்றித் தலைமையாசிரியர் திரு வ. நடராசா அவர்களும் பேசினர்கள். மாகேசுர பூசையும் நடைபெற்றது.

**மயிலிட்டி தெற்கில்**

ஆடி மாதம 22 உ (6-8-54) வெள்ளிக்கிழமை மாலை மயிலிட்டி தெற்கு ஞானவயிரவாலய மண்டபத்தில், இளஞ் சைவத்தொண்டர் சபையின் ஆதரவில்சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைவிழா கொண்டாடப்பட்டது.

பண்டிதர் திரு. வ. முத்துக்குமாரு விழாவுக்குத தலைமை வகித்தார். திருவாளர்கள் சி. சிவபாலசிங்கம், க. மகேசுவரன் என்பவர்களால் சுவாமிகளின் சரித்திரம இனிமையாகப் பேசப்பட்டது. திரு த. சிதம்பரநாதன் நன்றியுரை கூறினர்.

**மறவை**

**சைவபரிபாலன சங்கத்தில்**

மேற்படி சங்கத்தின் ஆதரவில் 6-8-54 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை கொண்டாடப்பட்டது. சுவாமிகளின் தேவாரங்கள கூட்டு வழிபாடாகப் பாராயணஞ் செய்யப்பட்டது, செல்வி மீனாட்சிசுந்தரசாஸ்திரி நாயனாரது திவ்விய சரித்திரத்தைச் சங்கீத உபந்நியாசமாக நிகழ்த்தினர். இதன்பின் சுந்தரர் தேவாரப்போட்டி ஒன்று நிகழ்ந்தது.

**சிவகாமி அம்பாள்**

**சண்முக நிலையத்தில்**

மேற்படி நிலயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை 6-8-54 வெள்ளிக்கிழமை இரவு 6 மணியளவில் நடைபெற்றது. சனசமூக நிலைப் பிரார்த்தனைச் சபையாரால் தேவார திருவாசகங்கள் முறையே ஓதப்பெற்றன. காரியதரிசி திரு. எம். கே. முருகையா அவர்கள் நாயனர் தோன்றிய வரலாறும் அவர் சைவத்திற்குச்செய்த தொண்டுகளும் பற்றிச் சொற்பொழிவாற்றினர். திரு. கி. சிவமணி அவர்களும் நாயனரின சிறப்புப்பற்றிப் பேசினர்.

**தெல்லிப்பழை**

**பாலர் ஞானோதயசபையில்**

மேற்படி குருபூசை 6—8—54 வெள்ளிக்கிழமைபாலர் ஞானோதயசபை அங்கத்தவர்களால் காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில்கொண்டாடப்பட்டது.

மாலை 4 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கும் விசேடபூசை ஆராதனைகள் நடைபெற்றபின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது.

திரு. எ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றியும் பாலர் ஞானோதய சபையால் வரும நன்மைகளைப் பற்றியும பேசினர். பிள்ளைகளாலும சில பேச்சுகளும் தேவார பாராயணங்களும் நடைபெற்றன.

**தெல்லிப்பழை**

**மகாஜனக்கல்லூரியில்**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிச் சைவ இளைஞர்சங்கத்தின ஆதரவில்சுந்தரமூர்த்தி சுவாமிகள குருபூசைத்திருநாள் மேற்படி கல்லூரி மண்டபத்தில் ஆடி மாதம 22ம் திகதி(6-8-54)வெள்ளிக்கிழமை மாலை கொண்டாடப்பட்டது. நடேசப்பெருமானதும் நால்வர் பெருமக்களினதும் திருவுருவப்படங்களுக்கு விசேட பூசை முடிந்தபின் தேவார பாராயணத்தோடு கல்லூரி அதிபர் திரு செ. து. ஜயரத்தினம் அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி. அமிர்தாம்பிகை சதாசிவமும பண்டிதர் திரு. கா. நமசிவாயம் அவர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

## ஆந்திராவிலுள்ள தமிழ்ப் பகுதிகள்

ஆந்திராநாட்டிலுள்ள தமிழ்ப்பகுதிகளைப்பற்றி ஒருகேள்விக்கு மறுமொழி கொடுக்கும் பொழுது சென்னை இராச்சியத்துக்குரிய தமிழ்ப் பகுதிகளெல்லாம இவ்வாண்டிறுதிக்குள் சென்னை இராச்சியத்துக்குக் கிடைக்குமென்று நிதிமந்திரி சுப்பிரமணியம கூறினர்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

செல்லப்பா கதிர்காமசுவாமியும் பெண் சிவபாக்கியம்

கொக்குவில் கிழக்கு

—வழக்காளிகள்,

நம். 10588

சுப்புறமணியம் கைம்பெண் நாகம்மா சின்னப்பு சுப்பிரமணியத்தின் ஆதனத்துக்கு தத்துவகாரியாயும் தனித்தும்,

எதிரி,

யாட்பாணம் பெரியகோட்டின் 10588ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுக் காணும் ஆதனம் 1954ம் ஆண்டு புரட்டாசி மாசம் 18ம் திகதி 18-9-54 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதன விபரம்

யாட்பாணத்தைச் சேர்ந்தகொக்குவிலில் தெய்வன் தோட்டம என்னும் காணி நீ. இ. 2. குளி $5\frac{1}{4}$ வானபயிர் செய்பயிர்களும கொட்டிலும் வடமேற்கில்இருக்கும்கிணற்றில பங்கும் வழிவாய்க்கால் உருத்தும் மேற்கெல்லைக் காணியின வடக்கெல்லைப் பக்கமாக வழிஉருத்தும் மேற்கெல்லையில் உள்ள ஒழுங்கைக்கு போகும், நாகம்மாவுக்கு உரிய 4 முள பாதை மேற்படி பாவிப்பு உருத்து புறநீங்கலாக.

எல்லை கிழக்கு சின்னத்துரை சடாசிவத்தின ஆதனம். வடக்கு கிணற்றுக்குப்போகும்வழி, மேற்கு தாமோதரம்பிள்ளை முத்துத்தம்பியின ஆதனம், தெற்கு மார்க்கண்டு பெண் நாகம்மாவும் ஒழுங்கையும் இவை அடங்கிலும்.

V. A. Durayappah,
Commissioner, Valuer

Jaffna. 1-8-54

M 107 13-8-54

## கலங்குகின்றது கோவாநிலைமை

கோவாநிலைமை பழுதடைந்து எல்லை கடந்துவிடுமோ என்று ஐயுற வேண்டியிருந்த சமயத்தில நடுநிலைமைக்குழுவொன்றை அமைத்தற்கு இந்தியா சம்மதமா எனறு போர்த்துக்கல் வினவியபொழுது இந்தியா சம்மதங்கொடுத்தது இப்பொழுது அந்தச் சம்மதம் சரியல்லவென்று நிலைமையை மாற்றுகின்றது போர்த்துக்கல் நடுநிலைமைப் பார்வையாளர் கோவாவை மாத்திரமல்ல, கோவாவையடுத்திருக்கும் இந்திய பகுதிகளையும் பார்வையிட வேண்டுமென்கிறது போர்த்துக்கல்!

# கந்தபுராணபடனம்

—:o:—

## பூர்த்திப்படிப்பு

திருவருளை முன்னிட்டு விஜய ஹு பங்குனி மீ ௬ உ (19-3-54) வெள்ளிக்கிழமை புண்ணிய தினமாகிய உத்திரத்திலன்று யாழ்ப்பாணம சைவபரிபாலனசபையாதரவில் மேற்படி சபையினது சைவாச்சிரம நாவலர்மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட கந்தபுராணபடனம் தினந்தோறும் நடைபெற்று வருகின்றது. அதன் பூர்த்திப்படிப்பு வள்ளியம்மன் திருமணப் படலம் (பிற்பகுதி) நிகழும் ஜயஹு ஆடி மீ ௩௧ உ (15-8.54) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறும்,

சைவாபிமானிகள் மேற்படி புராணபடனத்திற் பங்குபற்றியும் கேட்டும் கலியுகவரதராகிய சண்முகப்பெருமானின் அனுக்கிரகத்தைப் பெறுவார்களாக.

மு. மயில்வாகனம்

சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலனசபை,

யாழ்ப்பாணம், 9-8 54.

# வேண்டப்படும் அடிமைத்தன்மை

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம B. (Hons) "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" என்னும விஷயத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பேசும்போது:— "இக்காலத்தில் அடிமைத் தன்மை வேண்டாமென்று கூக்குரல் செய்கிறார்கள். ஆனல் சுந்தரர் அடிமைத் தன்மையையே வேண்டி நிற்கிறார், அடியார்க்கடியாராவது எக்காலமோ என்று இரங்கினார் சுந்தரர். சைவத்தில் நான்கு மார்க்கங்கள உள. அவை சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சன்மார்க்கம் இவற்றில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய நெறி சக மார்க்கம். பாலில் வெண்ணெய்போலவும் விறகில் தீ போலவும், மறைந்து உளனம் புகுகள்வனும் விஷ்ணு பிரமா முதலிய இவர்களாலும காண்டற்கரியதாய் எங்கும வியாபித்திருக்கும் சிவபிரானை தோழனும், தூதுவனுய பெறுவொன்றால் அப் பெருமகனின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ........? என்று எடுத்துக்காட்டி வினவினர்.

பின்னர் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை ஆசிரியர் பண்டிதர் திரு. கா. நமசிவாயம் அவர்கள் "சுந்தரர் தேவாரம்" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது:— "திருத்தொண்டத் தொகையெனும் திவ்விய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடி அடியார்பெருமையை விளக்கியருளினர். சுந்தரர் தமக்குமுன்பும அக்காலத்திலும் வாழ்ந்த அடியாரைப்பற்றி மாத்திரம் தேவாரம் பாடினவரல்லர்! எதிர்காலத்தை நோக்கி நோக்கி அவர் உள்ளம் சென்றது. "அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று கூறியதால் உண்மைத் தமிழன் உண்மைச்சைவனின் பண்பாடு எவ்வளவு பரந்ததாக விளங்கிற்று என்று எடுத்துக் காட்டினர்.

முன்னிதழ்த்தொடர்ச்சி — [5]

# செந்தமிழ்ச் சிவத்திரு நான் மறைகள்

## 'இருக்கு' 'சாமம்' 'வேதங்கள்' ஆராய்ச்சி

### தமிழ்மறைகள் உள்ளடென்பதற்குத் தக்க சான்றுகள்

இனி, வல்லன் என்பதற்கு, கற்று வல்லன் அல்லது கேட்டுவல்லன் எனப் பொருள் கண்டு, திருஞானசம்பந்தர் கற்று வல்லதுங் கேட்டு வல்லதும் ஆரிய நான்மறையே ஆகலாம் என்றும் அதனையே, "நான்மறை வல்ல ஞானசம்பந்தன் என்றுங் குறித்திருக்கலாம் என்றும் கொள்ளல் ஆகாதோவெனில் திருஞானம்பந்தர் கற்று வல்லது தமிழ் மறையன்றெனக் கூற முடியாது. "சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ்ஞான சம்பந்தன்" எனத் திருஞானசம்பந்தர் தம்மையே சுட்டிக் கூறுவதினல், இவர் கேட்டு வல்லதும் தமிழேயாம். இதனல் இவர்க்கு ஆரிய மறையின் அறிவில்லையெனக் கூற முன்வந்தேனில்லை. ஆரிய மறைகளைத் திருஞானசம்பந்தர் பயிலவில்லையென்பதையே வலியுறுத்துகின்றேன். எனவே 'மறை ஞான சம்பந்தன்' நான்மறை வல்ல ஞானசம்பந்தன் எனுஞ் சொற்றொடரில் விளக்கும் மறை தமிழ் மறையைக் குறிக்குமெனறே தெளிக.

இன்னுந் திருஞானசம்பந்தர் "நான்மறை நாவன் நற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்" 'நாமலிக தோக்கு நான்மறை ஞானசம்பந்தன்' 'மன்னியசீர்மறை நாவன் வளர் ஞானசம்பந்தன்' 'நாவினலம் புகழ்சீர் நான்மறையான் ஞானசம்பந்தன்' செழுமறை நிறை நாவன் அரனெனும் பணி வல்லவன்' என்பனபோன்ற பல்வேறு சொற்றொடர்களால் இறைவன் தமுன்னின்று தம் நாவாற் பாடுஞ் சிறப்புறுத்தப் பெற்ற, திருமறைகளையே மறையென்று கூறியருளுகின்றார். இவ்வாறன்றி மறையென்னுஞ் சொல், ஈண்டும் ஆரிய மறையையே குறிக்குமென்றும், அவர் தமிழ்மறை பாடுங் காலமொழிந்த ஏனைய காலங்களில், ஆரியமறையைப் பயின்றிருக்கலாமென்றும் அதனையே தமதுதேவாரத் திருப் பாட்டுக்களில் எல்லாம் 'நான்மறையெனக் குறித்தருளினரெனக் கூறலாகாதோ எனின் ஆகாது. திருஞானசம்பந்தப் பெருமான் தம்மைக் குறிக்கும் திருப்பதிகத் தொடர்களிலெல்லாம் பன்முறை 'தமிழ் விரகன் எனுங் காரணப் பெயரையே சிறப்புப் பெயராக எடுத்தாளுவதன்றிப் பல இடங்களில்

> 'தமிழ் ஞானசம்பந்தன்"
> "நற்றமிழ்க்கின்றுணை"
> "தமிழ்க்கிழமைஞானன்"
> "செந்தமிழ்த் தடகடல்"
> 'அருந்தமிழ் சுற்றுமுற்று மாயினை"

என்று குறித்தருளுவதையும், பிறர் இவரைக் குறிக்கும்பொழுதும் 'தமிழாகரன்' 'தீந்தமிழோர் கண்ணென வோங்கு கவுணியர் தீபன்' தண்டமிழ் விரகன்' 'நற்றமிழ் விரகன்' 'மாதமிழ் வாரகன்' 'முத்தமிழ் நாலெல்லாம் முழுதுணர்ந்தபிள்ளையார், முதலியபல அருந்தமிழுடைமொழிகளால் அணிசெய்து அவரின் தமிழ்ப் புலமைச்சிறப்பையே பாராட்டிப்போற்றுதலையும் ஓரிடத்திலாதல் ஆரியம வல்லாரென அவரைக் குறித்துச் சொல்லாமையும் நோக்கவல்லார்க்குத் திருஞானசம்பந்தர் ஆரிய வேதத்தைப் பயின்றிராரென்பது வெளிப்படை.

பதினயிரந் தேவாரத் திருப்பதிகங்களைப் பதினுவாண்டிற் பாடியருளிய திருஞானசம்பந்தப் பெருமான், தமிழ் மயமாகவே இருந்து மறைபாடிப் போற்றினர் எனக்கொள்ளலாமே அன்றி இடைக் காலங்களில் ஆரியம் பயின்றாரெனக் கூறுதல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாது திருஞானசம்பந்தப் பெருமான், தமிழ்மறையாகிய தேவாரத் திருப்பதிகங்கள் பாடாக் காலங்களையும், இறைவனைப் பூசைசெய்து வழிபடாக் காலங்களையுங் கழிக்கும் வகையை,

> 'வந்தியோடு பூசையல்லாப்
> போழ்தில் மறைபேசச்
> சந்திப்போழ்திற் சமாதிசெய்யும்
> ... ... ... ... ஞானசம்பந்தன்"

எனத் தாமே திருவாய் மலர்ந்தருளுகின்றார். இத் திருப்பாட்டில் தாம் மறை பேசியும் சமாதி செய்தும் இடைக் காலத்தைக் கழிப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஈண்டு மறையை வழக்கம்போல் ஓதுவதாகக் குறியாது பேசுவதாகக் குறித்திருப்பதால் அந்த மறை ஆரிய மறையாகாதென்பதும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற் பொருட் செய்தி நிரம்பிய தமிழ் மறையேயாமென்பதும தேற்றம்.

இனி யிதுவுமன்றி, 'ஒருநெறிய மனம் வைத்துணர்பவரும், "கைச்சிறுமறியவன் கழலாற் பேணுக்கருத்துடையவரும், 'அண்ணல் சரிதைகள பரவி நின்றுருகுகின்றவரும், கழுமலத்தவிற் கடவுள்பாதமே கருதுகின்றவருமாகிய 'வம்பருவரிவண்டு' மணநாற மலரும், மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணு எம்பிரானை ஞானசம்பந்தர் சிறுதெய்வம் பலவுண்டெனும் பனுவலாகிய ஆரியவேதம் பயின்றிந்தார் எனக் கூறல் எங்ஙனம் பொருந்தும். வளரும்.

--------

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

**க. வேந்தனர் அவர்கள்**

--------

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 15—8—54 —— 21—8—54**

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இது ஒருசலனம் நிறைந்தவாரம். நண்பர் உமக்கு நம்பிக்கைத்துரோகம் செய்வார்கள் தேகசுகவீனங்களுக்குமிடமுண்டு குடும்ப நிலைமைகளுமசிறிதும்நல்லாயிருக்கமாட்டா புதியது ஒன்றுந் தொடங்கவேண்டாம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் நீர் புதுப்பொறுப்புகள் ஏற்கவேண்டிவரும். இதன் பயனுய் உமக்கு அலைக்குக்கூடிய வேலை ஏற்படும். மனச்சமாதானமிராது. தனலாபத்துக்கிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4. திருவாதிரை, புனர்பூசம 1,2,3.**

தளப்பமான வாரம். ஆனல் பண நிலைமைகள் செவ்வாயினபின் திருந்தவேண்டும் நண்பர் அதிக உதவியாயிருப்பர் பிழையெண்ணங்கள் நீக்கப்படும்.

**கடகராசி புனர்பூசம் 4மபாதம பூசம் ஆயிலியம்.**

செலவதிகரிக்கும். முதலிருநாட்களிலும் உம்முடைய எல்லாப் புது முயற்சிகளிலும் கவனமாயிருக்கவும் சாணிகள்மூலம் பின்னுக்கு இலாபத்துக்கிடமுண்டு. சகோதர சகோதரிகள் உதவியாயிருப்பர்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

உத்தியோகாரியங்களுக்கு நல்ல வாரம். செவ்வாய்புதன் கவனமாய்க்கழிக்கவேண்டும். சண்டைகளைத் தவிர்க்கவும், தேக சுகவீனங்கள் விசேடமாய் வயிற்றுக்குழப்படிகள் உண்டாக இடமுண்டு வாரஇறுதி தனலாபத்தைத் தரும்.

**கன்னிராசி உத்திரம் 2 3.4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

வாரத்தின் முதல் அரைப்பகுதி புதுமுயற்சிகளுக்கு நல்லாயிருக்கும் வியாழனும்வெள்ளியும் கவனமாய்க் கழிக்கவும். அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வாரமிகுதி திரும்பவும் நன்ருயின்றது,

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம**

கடைசி இருநாட்களும் தவிர இந்தவாரம் நல்லாயிருக்கும் புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும, சமூகசித்தியும் புகழும் நிச்சயம், கடைசி இருநாட்களையும்கவனமாய்க்கழிக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம் அநுஷம், கேட்டை.**

உம்முடைய காரியங்களில் சில திருத்தங்கள் நிச்சயம். ஆபத்துக்களிலிருந்து உம்முடைய நண்பர் உம்மை நீக்குவர். ஆனல் நல்ல காலவரவுக்குச் சிறிதுகாலம் பொறுத்திருக்கவேண்டும், புதியதாய் ஒன்றையும் தொடங்கவேண்டாம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

சிறிது தளப்பமான வாரம். தனலாபமும் உத்தியோக சித்தியும் நிச்சயம். ஆனல் மனச்சமாதானமோ குடும்பசமாதானமோ இருக்கமாட்டாது. வாரஇறுதியில் நண்பருடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் கள்ளரில் தொந்தரவுகளைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும் உம்முடையமனம் அமைதியாயிராது குடும்பநிலைமைகள் திருந்தவேண்டும் ஆனல தேகசுகவீனம் சிறிது செலவுண்டாக்கக்கூடும்

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

உத்தியோகத்துறையில் நல்லவாரம். உம்முடைய புதுமுயற்சிகளில் அதிகம் முன்னேற்றமடையக்கூடியதாயிருக்கும். சமூக சித்தியும் பிள்ளைகள்மூலம் சந்தோஷத்துக்குமிடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

குடும்பநிலைமைகள் உம்முடைய மனதை அதிகம் குழப்பும் ஆராயாத தீர்மானங்களில் நிலைமை இறங்கவேண்டாம். இழிமொழி பரப்புவோரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், வார இறுதியில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

--------

## அரசாங்க அறிவித்தல்

**வன பரிபாலனப் பகுதி**

N 2138

21-8 54 காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் 100 கூறுகள் அடங்கிய புதிய முதிரை பாலை, முதிரை மரங்களும், 10 கூறுகள் அடங்கிய அரிந்த மரங்களும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனைக்கு முன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் டிப்போ கிப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன், அவரிடமிருக்கும் வினயபரத்தில பிரகாரம் நிந்தனைகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

--------

## இந்து சன்மார்க்க சங்கம்

(யாழ்ப்பாணம், கோட்டைவட்டாரம்)

இச்சங்கத்தின் ஆதரவிற் கோட்டை வட்டாரகோயில வீதியிலுள்ள திருவாளர். ஆர். ரி. செல்லையா அவர்களின் இல்லத்திற் சென்ற வெள்ளிக்கிழமை மாலை அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் "சமயமும் துறவும்" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை ஆற்றினர். கோட்டை வட்டாரத்திலும் அதற்கணித்தாகவுள்ள இடங்களிலுமுள்ள சைவமக்கள் பக்தி சிரத்தையுடன் பங்குபற்றினர்.

சமய வாழ்க்கையும் ஒழுக்கமேம்பாடுங் குன்றிவரும இந் நாட்களிற் சைவச் சிறுவர் சிறுமியர் தங்கள் சமயத்தின் சிறப்பையுணர்ந்து ஒழுகுவதற்கு இத்தகைய இந்துசன்மார்க்க சங்கத்தின் முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கதொன்று. சைவமக்கள் இச் சங்கத்துக்கு உறுதுணையாக நின்று ஆகவேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாகின்றனர் என்று வாழ்த்தினர்.

இச்சங்கம் மூன்றுமாதங்களுக்குமுன்னர் கோட்டை வட்டாரத்திலுள்ள சைவ சமய அன்பர்களால் நிறுவப்பெற்றது. சைவமக்கள் நிறைந்துள்ள இப்பகுதியில் இதுவரையும் சைவ சமயவிருத்திக்குரிய எவ்வித முயற்சிகளும் நடைபெறவில்லையென்னுங்குறையை நீக்கும் பொருட்டு இச் சங்கம் கோட்டைவட்டாரச் சைவ அன்பர்களால் நிறுவப்பெற்றது.

சைவசமய விருத்தியை அடிப்படையாகக்கொண்டு இந்துசன்மார்க்க சங்கம் கிழமைகள்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிரார்த்தனைக்கூட்டமும் சைவ சமய விரிவுரைகளும் நடாத்தி வருகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளிற் காலை 9 மணிக்குத் தேவாரபாராயண வகுப்புகள் நடாத்தப்பெற்று வருகின்றன. இவ் வகுப்பில் 50 பிள்ளைகளுக்கு மேலாக சேர்ந்துள்ளனர்.

இப் பணியில் ஈடுபட்டு உழைக்கும் பெரியார்களுக்குச் சைவநன்மக்களின் உதவி கிடைத்தேயாகவேண்டும் என்று பிரார்த்தித்தார் சேர். கந்தையா வைத்தியநாதன்.

--------

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponnai Jaffna on Friday August 13 1954.